**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 14 ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆனி மாதம் 30ம் நாள்
**இ.ம.எண். 2/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 193/2019**

1. மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கம்பாடியை சேர்ந்த வெளிப்பாளையம் பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் செல்வராஜ் மனைவி 61 வயதுள்ள அமுதா.
2. மேற்படி முகவரியில் வசிக்கும் லெட்சுமணன் குமாரர் இந்து 64 வயதுள்ள ரவிச்சந்திரன். ..மனுதாரர்கள்/ வாதிகள்

//எதிர்//

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, No.176 ஆரிய நாட்டுத்தெருவில் வசிக்கும் கோவிந்தராஜ் குமாரர் 54 வயதுள்ள பூபாலன்.
..எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

மனுதாரரால், இம்மனுவானது மனு சொத்தினை அளவீடு செய்ய ஓர் வழக்கறிஞர்/ஆணையர் அவர்களை நியமனம் செய்து நில அளவையர் உதவியுடன் மனு சொத்தினை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 12.06.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 12.06.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 14.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் S. சரவணன் அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**சொத்து விபரம்**

**ஏ ஷெடியூல்**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார்-பதிவகம், தரங்கம்பாடி தாலுக்கா, சாத்தங்குடி வட்டம், கடை வெளிப்பாளையம் கிராமத்தில் நத்தம் புல எண்.297/20ல் தெருவுக்கு வடக்கு, கலியபெருமாள் இடத்திற்கு மேற்கு, குளத்துக்கு தெற்கு,

தெருவிற்கு கிழக்கு இந்த நான்கெல்லைக்குட்பட்டதில் வடபுறம் கீழ்மேல் 56 1/4அடி, தென்புறம் கீழ்மேல் 53 அடி, தென்வடல் 80 அடி உள்ள மனக்கெல்லை அதன் கீழ்நிலம் வடபுறம், தென்புறம் வேலி மரந்தழை உள்படவும், அதிலுள்ள 2 வீடுகள் உள்பட.

**<u>பி ஷெடியூல்</u>**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார்-பதிவகம், தரங்கம்பாடி தாலுக்கா, சாத்தங்குடி வட்டம், கடை வெளிப்பாளையம் கிராமத்தில் நத்தம் புல எண்.297/20( பழைய புல எண்.297/29)ல் தெருவுக்கு வடக்கு, கலியபெருமாள் இடத்திற்கு மேற்கு, குளத்துக்கு தெற்கு, ஏ ஷெடியூல் சொத்துக்கு (பி ஷெடியூல் சொத்து நீங்கலாக) கிழக்கு இதற்குள்பட்டதில் கிழக்கு புறமாக கீழ்மேல் சுமார் 2அடி, தென்வடல் 80 அடி கூடுதல் 160 சதுரடி.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி